★ காஞ்சிபுரம்
★ ரெயின் போ பெனாரிஸ்
★ டபிள் கெற் பின் பெனாரிஸ்
★ மைசூர் சில்க்ஸ்
★ காயத்திரி சில்க்ஸ்
★ பட்டு வேட்டிகள்
மற்றும் சகல விதமான
பட்டுப் புடவைகளுக்கும்
ராசி பட்டுச்சோலை
70, 71A, சிறப்பு அங்காடி
நவீன சந்தை, யாழ்ப்பாணம்

பக்கங்கள்: நான்கு
Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

மங்கள வைபவங்களுக்கு
ஏற்ற பட்டுப் புடவைகள்
மற்றும் சகல விதமான
ரெடிமேற் வகைகளுக்கு
RASI
ராசி சில்க்ஸ்

சுடர் 9 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆவணி 31 வெள்ளிக்கிழமை (16 09 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 293

# புலிகள் - அரசு ஆரம்பப் பேச்சுக்கு மிக விரைவில் திகதி அறிவிக்கப்படும்

## உயர் அதிகாரிகளுடன் சந்திரிகா கலந்தாலோசனை

கொழும்பு, செப்ரெம்பர் 16

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்துக்கும் இடையேயான ஆரம்பப் பேச்சுக்களைத் தொடங்குவதற்கான திகதியை அரசு மிக விரைவில் தீர்மானிக்கும் என்று "லங்காபுவத்" செய்தி ஏஜென்சி தெரிவித்தது.

முதலாவது கூட்டத்துக்கான நாள் நிச்சயிக்கப்பட்டதும், அரசாங்கம் தனது பிரதிநிதிகளை நியமிக்கும் என்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தைக்கான ஆரம்ப கட்டத்தைத் தொடங்குவதற்கான திகதியை நிர்ணயிப்பது, மற்றும் படிமுறைகளைத் (MODALITIES) தயாரிப்பது சம்பந்தமாக பிரதமர் சந்திரிகா, தமது உயரதிகாரிகளுடன் நேற்று முன்தினம் கலந்தாலோசித்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் திரு. வே. பிரபாகரன் ஆரம்பப் பேச்சுக்களை நடத்துவதற்கு தமது தரப்பில் நான்கு பிரதிநிதிகளை நியமித்து பிரதமர் சந்திரிகாவுக்குப் பதில் எழுதியிருந்தார்.

அதனைத் தொடர்ந்து பிரதமர் தமது உயரதிகாரிகளுடன் முக்கிய பேச்சுக்களை நடத்தினார்.

இருதரப்பினரும் சந்தித்துப் பேசுவதற்கான முதலாவது கூட்டத் திகதி நிச்சயிக்கப்பட்டதும் அரசு தனது பிரதிநிதிகளை அறிவிக்கும் என்று எதிர்பார்க்கப்படுவதாக "லங்கா புவத்" தை மேற்கோள் காட்டி 'ரூபவாஹினி' அறிவித்தது.

பிரதமரின் கடிதத்துக்கு விடுதலைப் புலிகள் தலைவர் திரு. பிரபாகரன் அனுப்பிய பதில் உற்சாகம் தருவதாகவும் திருப்தி தருவதாகவும் இருப்பதாக அதிகாரிகள் கூறியதாகவும் தெரிவிக்கப்பட்டது. (அ-ச-6)

## 64 பேர் கொண்ட யாத்திரிகர் குழு

### தெற்கில் இருந்து நயினாதீவுக்கு

கொழும்பு, செப். 16

12 வருடங்களுக்குப் பின்னர் முதல் தடவையாக தென்பகுதியில் இருந்து சிங்கள பௌத்த யாத்திரிகர் குழுவொன்று வடபகுதியில் உள்ள நாகதீப விகாரைக்குத் தலயாத்திரை மேற்கொள்ளவிருக்கிறது.

64 பேரடங்கிய இக்குழு கொழும்பில் இருந்து நேற்று முன்தினம் புறப்பட்டது.

சேருவிலயில் நேற்று இக்குழு தங்க ஏற்பாடாகியிருந்தது.

இன்று மாலை இக்குழு திருகோணமலைத் துறைமுகத்தில் இருந்து கப்பல் மூலம் நாகதீப விகாரைக்குச் செல்லும் என அறிவிக்கப்படுகிறது. (இ-6)

## ஹெய்ட்டி மீதான படையெடுப்பு

### எந்நேரமும் இடம்பெறலாம்

வாஷிங்டன், செப். 16

ஹெய்ட்டி மீது படை எடுப்பதற்கான இறுதி ஏற்பாடுகளை அமெரிக்கா செய்து முடித்துள்ளது. ஹெய்ட்டி மீதான ராணுவ நடவடிக்கை குறித்து அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் நேற்று இரவு நாட்டு மக்களுக்கு டெலிவிஷனில் உரை நிகழ்த்த இருந்தார்.

அமெரிக்க விமானம் தாங்கிக் கப்பல் ஒன்று ஏற்கனவே கரிபியன் கடல் பிராந்தியத்தை நோக்கி புறப்பட்டுவிட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

1990 ஆம் ஆண்டு ஹெய்ட்டியில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் வெற்றி பெற்றது அதிகாரத்தைக் கைப்பற்றிய அரிஸ்ரைட் 1991 ஆம் ஆண்டு நடைபெற்ற இராணுவப் புரட்சியின் போது பதவி கவிழ்க்கப்பட்டார்.

அமெரிக்காவில் தஞ்சம் அடைந்துள்ள அரிஸ்ரைட்டை மீண்டும் ஹெய்ட்டியில் பதவியில் அமர்த்துவதே அமெரிக்காவின் ராணுவ நடவடிக்கையின் நோக்கம் ஆகும்.

ராணுவ நடவடிக்கைக்கான அங்கீகாரம் ஏற்கனவே ஐ. நா. பாதுகாப்புச் சபை மூலம் பெறப்பட்டுவிட்டது. (இ)



## சர்வதேச அமைப்புகளின் மத்தியஸ்தம் தேவைப்படாது

### அனுருத்த கூறுகிறார்

சமாதான முயற்சிகளில், செஞ்சிலுவைச் சங்கம் போன்ற சர்வதேச அமைப்புகளின் மத்தியஸ்தத்தை அரசாங்கம் ஒருபோதும் டன்படுத்தமாட்டாது.

பாதுகாப்புப் பிரதி அமைச்சர் அனுருத்த ரத்வத்த மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மன்னார், வவுனியா பகுதிகளில் ராணுவப் பாதுகாப்பு முன்னணி நிலைகளைப் பார்வையிட்ட பின்னர் ராணுவத்தின் தேவைகள் குறைபாடுகள் ஆகியவற்றை அறிந்து கொள்ளும் முகமாக நடைபெற்ற கூட்டத்தில் அவர் உரை நிகழ்த்தினார்.

தமது இந்த விஜயத்தின் நோக்கம் அமைதியை நிலைநாட்ட அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகள் பற்றி ஆயுதப் படையினருக்கு எடுத்துரைப்பதாகும் என்றும் அனுருத்த ரத்வத்த கூறினார்.

நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் முன்னைய அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கைகளை இந்த அரசாங்கம் ஒருபோதும் பின்பற்றாது. ஆயுதப்படைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு காணப்படும் இப்படி அவர் மேலும் கூறினார். (அ)

## பிரதி அமைச்சர் வீரவன்னிக்கு விளக்க மறியல் உத்தரவு!

கொழும்பு, செப் 16

கொலைச் சம்பவம் ஒன்று தொடர்பாக விவசாய, காணி மற்றும் வனவளத்துறை பிரதி அமைச்சர் சயரவீர வீரவன்னியை இம்மாதம் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி பதுளை நீதிவான் சம்பத் அபேகூன் உத்தரவிட்டார்.

பிரதி அமைச்சர் நீரிழிவு நோயினால் அவஸ்தைப்படுவதாக அவரது சட்டத்தரணி நீதிவானிடம் தெரிவித்தார்.

இதனை அடுத்து சிறையில் தேவையான மருத்துவ வசதிகளை அவருக்கு செய்து கொடுக்கும்படி சிறைச்சாலை அதிகாரிகளுக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

பதுளை மாவட்டத்தில் போட்டியிட்ட ஐ. தே. க. வேட்பாளர் எட்வின் விக்ரமரத்னாவின் சகோதரரான குட்டின் விக்ரமரத்னாவை பொதுத்தேர்தல் தினத்தன்று கம்பியால் தாக்கிக் கொலை (4 ஆம் பக்கம் பார்க்க)

## சீமெந்து தொழிற்சாலையை திருத்த நடவடிக்கை

### அமைச்சர் தூதுக் குழுவிடம் தகவல்

யாழ்ப்பாணம், செப். 16

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை விரைவில் திறக்க வீடமைப்பு, நிர்மாணத்துறை, பொதுவசதிகள் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பில் தம்மைச் சந்தித்த சீமெந்து தொழிலாளர் சங்கத் தூதுக்குழுவிடம் அமைச்சரே இத்தகவலை (3 ஆம் பக்கம் பார்க்க)

## தொழிற்சாலையை திருத்தி அமைக்க ரூ.9கோடி தேவை

யாழ்ப்பாணம், செப். 16

காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலையை திருத்தி மீள இயக்க 9 கோடி 50 லட்சம் ரூபா தேவை என மதிப்பிடப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை சீமெந்து கூட்டுத்தாபன அதிகாரிகள் தொழிற்சாலை பகுதிக்குச் சென்று மதிப்பீடு செய்ததாகவும்—

இந்த மதிப்பீடு விபரம் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வாவிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் — தெரிவிக்கப்பட்டது.

இந்த தொழிற்சாலையை இயக்குவது குறித்து கூட்டுத்தாபன அதிகாரிகளுக்கும், வீடமைப்பு நிர்மாண துறை அமைச்சு அதிகாரிகளுக்கும் இடையில் தொடர்ந்து பேச்சுக்கள் நடந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## முச்சந்தி முனி



அப்ப ரணசிங்காவுக்கு சுடலை ஞானம் பிறந்திருக்கு என்று சொல்லுங்கோ...!

## சந்திரிகாவுக்கு 'தமிழ்' பாராட்டு

கொழும்பு, செப் 16

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா எடுத்துவரும் முயற்சிகளை முன்னாள் பிரதமர் டாக்டர் விஜயானந்த தஹநாயக்கா பாராட்டியுள்ளார். (ஒ-எ-6

## செய்தியாளர்கள் யாழ். வந்தனர்

வடமராட்சி, செப். 16

ஜப்பானிய தொலைக்காட்சி மற்றும் வானொலியைச்சேர்ந்தசெய்தியாளர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தனர். (ஒ-173)

## கோமாரியில் ம!

யாழ்ப்பாணம், செப். 16

'கோமரி' கப்பல் 8 ஆயிரம் மெற்றிக் தொன் மாவுடன் நேற்று முன்தினம் பருத்தித்துறையை வந்தடைந்தது. (இ-4)



## ஐ.தே.க. ஆட்சியாளரை சாடும் முன்னாள் அமைச்சர்!

கொழும்பு. செப். 16

இனப்பிரச்சினையால் இலங்கை சீரழிந்துபோயுள்ளமைக்கு முன்னைய ஐ. தே. க. ஆட்சியாளர்கள் மற்றும் பௌத்த மத குருமார்களின் குறுகிய நோக்கே காரணம் என்று ஐ. தே. கவின் முன்னாள் அமைச்சர் ஏ. ஜே. ரணசிங்க கருத்து வெளியிட்டுள்ளார்.

சிறுபான்மையினருக்கு வேண்டிய உரிமைகளைக் கொடுக்காமல் முன்னைய ஆட்சியாளர்கள் தமது கு (3 ஆம் பக்கம் பார்க்க)

## நடராஜர் சிலை கீரிமலை ஆலயத்தை சேர்ந்ததாம்

கொழும்பு, செப். 16

வடக்கிலிருந்து இராணுவ அதிகாரி ஒருவரினால் கடத்திச் செல்லப்பட இருந்த சமயம் பிடிபட்ட நடராஜர் சிலை கீரிமலையில் உள்ள கோவில் ஒன்றைச் சேர்ந்தது என்று பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கடத்தல் முயற்சி முறியடிக்கப்பட்டதையடுத்து இந்த சிலை பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டு, தற்போது காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப் பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் (3 ஆம் பக்கம் பார்க்க)

## மாகோவில் 8 ஆயிரம் பரல் மண்எண்ணெய் வருகிறது

யாழ்ப்பாணம், செப். 16

8 ஆயிரம் பரல் மண்ணெண்ணெயுடன் 'மாஹோ' கப்பல் இன்று காலை பருத்தித்துறைக்கு வந்துசேரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கப்பலில் சமகாலை ப. நோ. கூ. சமாசத்துக்கும், தனியார் நிறுவனம் ஒன்றுக்கும் ஒருதொகை கிமெந்தும் எடுத்துவரப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.



## பாதிக்கப்பட்டோருக்கு மீண்டும் நஷ்டஈடு வழங்க ஏற்பாடு

### அமைச்சர் அஷ்ரப் அமைச்சரவைக்கு சிபார்சு

யாழ்ப்பாணம், செப். 16

யாழ் மாவட்டத்தில் இராணுவ நடவடிக்கைகளால் இறந்த மற்றும் காயமடைந்தவர்களுக்கான நஷ்டஈட்டுத் தொகையை மீண்டும் வழங்க புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம்.எச்.எம். அஷ்ரப் நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரியவந்தது.

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத பிரதேசங்களில் இந்த நஷ்டஈடு வழங்குவதை முன்னைய ஐ. தே. க. அரசு நிறுத்தி வைத்திருந்தது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நஷ்டஈடு வழங்க நடவடிக்கை எடுக்குமாறு யாழ் செயலகம் கேட்டிருந்தது.

அமைச்சர் அஷ்ரப் இது தொடர்பான அறிக்கை ஒன்றை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளதாகவும் — அமைச்சரவை ஆராய்ந்து இது குறித்து முடிவு எடுக்கும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

## பகிடி, சேஷ்டை புரிபவர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை

### காவல் துறை பொறுப்பாளர் தகவல்

யாழ்ப்பாணம், செப். 16

பெண் பிள்ளைகளுடன் பகிடி, சேஷ்டைகள் விடும் பொறுப்பற்ற நபர்கள் மீது ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்று தமிழீழ காவல் துறைப் பொறுப்பாளர் திரு. பா. நடேசன் அறிக்கை ஒன்றின் மூலம் அறிவித்துள்ளார்.

அறிக்கை விவரம் வருமாறு:

போராட்ட சூழ்நிலையில் எமது மக்கள் அளப்பரிய சாதனைகளை படைத்து வருகின்றனர். வரலாற்றில் முன் எப்போதும் இல்லாத முறையில் பிரச்சினைகளையும், நெருக்கடிகளையும் முறியடித்து புதிய வரலாறு ஒன்றை படைக்கும் அற்புதமான பணியில் தம்மை முற்றாக அர்ப்பணித்து வருகின்றனர் எமது மக்கள் எல்லோரும் தம்மால் முடிந்த சகல பங்களிப்புகளையும் எமது போராட்டத்திற்கு நல்கி வருகின்றனர்.

இச்சூழ்நிலையில் ஒரு சில பொறுப்பற்ற நபர்கள் மட்டும் சந்திகள், மக்கள் கூடும் இடங்களில் நின்றுகொண்டு விஷமத்தனமான முறையில் பெண் பிள்ளைகளுடன் பகிடி சேஷ்டைகள் விடுவது. அவர்களின் பின்னால் சென்று மனம் புண்படும்படியான வார்த்தைகள்- (4 ஆம் பக்கம் பார்க்க)

## பொருண்மிய கண்காட்சி நீடிப்பு

யாழ்ப்பாணம், செப்: 16

இன்று 16 ஆம் திகதி முடிவடைய இருந்த நல்லூர், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கண்காட்சி மேலும் ஒரு வார காலத்துக்கு அதாவது எதிர்வரும் 23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை வரை நீடிக்கப்பட்டுள்ளது.

பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் இக் கண்காட்சியைப் பார்வையிட்டு பயன் பெறுவதற்கு வசதியாகவே கண்காட்சி நீடிக்கப் பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படு (4 ஆம் பக்கம் பார்க்க)

## திலீபன் நினைவு நிகழ்ச்சிகள் நேற்று குடாநாட்டில் ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 16

தியாகி திலீபனின் ஏழாம் ஆண்டு நினைவுதினம் நேற்று உணர்வுபூர்வமாக ஆரம்பமாகியது.

குடாநாட்டின் அனைத்து இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ள நினைவுப் பந்தல்களிலும் திலீபனின் உருவப்படம் வைக்கப்பட்டு மலரஞ்சலி செலுத்தப்பட்டது.

உண்ணாவிரதம் ... களில் பெருமளவு ... வர்த்தகர்களும் ... காலை 9.00 மணி முதல் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் முன்றலில் அமைக்கப்பட்ட பந்தலில் நேற்று பாடசாலை மாணவர்களும் பொது மக்களும் அடையாள உண்ணாவிரதம் இருந்தனர்.

வலி. வடக்கில் ஏழாலை, மல்லாகம், அளவெட்டி, ... ... வடமராட்சியில் மந்திகை ஆலயம் துன்னாலை கலிகைக் கந்தசுவாமி ஆலயம், உடுப்பிட்டி நாவலடி விநாயகர் ஆலயம் ஆகியவற்றின் முன்றில்களிலும் தியாகி திலீபன் நினைவாக சிறப்புப் பந்தல்கள் அமைக்கப்பட்டு உண்ணாவிரதம் அனுஷ்டிக்கப்பட்டது.

வடமராட்சியில் வீதிகள், வீடுகள் முன்பாகவும், பாடசாலைகள், சனசமூக நிலையங்கள், அரச அலுவலகங்கள் பொது நிலையங்கள் ஆகியன எங்கும் திலீபனின் உருவப் படங்களுக்கு மலர் மாலை சூட்டப்பட்டு அஞ்சலி நிகழ்வுகள் நடைபெற்றன.

கொக்குவிலில் திலீபன் நினைவை ஒட்டி வீதிகள், ஒழுங்கைகள் துப்புரவாக்கப்பட்டு பாசறைகள் முன்பாகவும், வீடுகள் முன்பாகவும் சிறிய அழகான குடிசைகள் அமைக்கப்பட்டு, திலீபனின் திருவுருவப் படங்கள் வைக்கப்பட்டு அஞ்சலி செலுத்தப் (4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

இறைச்சிக்கோழிகள், மரச் சன்றுகள் விற்பனைக்குண்டு. அண்ணா பாம், இணுவில். (சி-9171)

ஓடக்கூடிய நிலையிலுள்ள A/60 கார் விற்பனைக்கு உண்டு. சா. கணேசலிங்கம், கே. கே. எஸ். வீதி, கொக்குவில். (32874)

பிறிமா புறொயிலர் கோழிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்குண்டு. ஓடருக்கு கோழிக் குஞ்சுகள் எடுத்துக்கொடுக்கப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: சி. குலசிங்கம், இல. 9, நர்சா வீதி, [Barக்கு முன்பாக], யாழ்ப்பாணம். (32895)

### விற்பனையாகிறது

பாகுபாடு, பெயரீடு மற்றும் தாவரக் குடும்பங்கள் பேராசிரியர் ஆர். என். டி. பொன்சேகா, தாவரவியற் திணைக்களம், கொழும்பு பல்கலைக்கழகம். வெளியீடு: ஸ்ரீலங்கா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-9116)

### அளவையியல்

விஞ்ஞான முறையியல் புதிய பாடத்திட்டத்துக்கு அமைந்தது. ஆக்கம்: S. சந்திரராஜா. விற்பனையாகிறது பூபாலசிங்கம் புத்தக நிலையம், யாழ்ப்பாணம். (சி-9157)

### கோழிகள்

முட்டை இடும் லேயர்க் கோழிகள், விறாத்துக் குஞ்சுகள். ஒரு மாதம் நிரம்பிய கினிக்கோழிக் குஞ்சுகள், இறைச்சிக்குரிய கோழிகள் விற்பனைக்குண்டு. கந்தசாமி அன் சன்ஸ், இல. 16, ஆடிய பாத வீதி, நல்லூர். (32894)

### புறொயிலர் குஞ்சு

Prima Broiler (பிறிமா புறொயிலர்) ஐந்து நாள் கோழிக் குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. ''மல்லிகாபதி'' சந்தை கிழக்கு ஒழுங்கை, மானிப்பாய். (32872)

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவசாயம் விருத்தியாகுமா? விவாகம் நடைபெறுமா? வெளிநாடு போகலாமா? கேட்டுப்பாருங்கள்! பி. ப. 3 முதல் 6 வரை த. சிவானந்தன், பிரபல சோதிடர், 384, கோயில் வீதி, நல்லூர் வடக்கு. கிளை: ஆனந்தா சோதிட நிலையம், ரயில்வே கடவைச் சந்தி, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். தினமும் காலை 8-30—12-30. (32883)

### மணிக்கூடுகள் தேவை

உதிரிப்பாகங்களுக்காக பாவித்த நல்ல நிலையிலுள்ள மணிக்கூடுகள் வாங்கப்படும். சகல மணிக்கூடுகள், றேடியோக்கள் உத்தரவாதத்துடன் திருத்தப்படும். டில்கார் அன் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி [ஆரிய குளம் சந்தி], யாழ்ப்பாணம். கிளைகள்: ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை. கண்டி வீதி, சாவகச்சேரி. (சி 9044)

### தவறிவிட்டது

13 9-94 அன்று இராஜ்கபரியர் லேன் மானிப்பாய்க்கும், சோதி வேம்படி லேன் காளி கோயிலடிக்கும் இடையில் 1½ பவுண் மதிக்கத்தக்க தங்கச் சங்கிலி ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் கீழ் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்: கதிர்காமு சந்திரன், கலைசபை வீதி, மானிப்பாய். தகுந்த சன்மானம் வழங்கப்படும். [7917]

## பாடசாலைகளில நூலகங்கள்

கொழும்பு, செப் 16

பாடசாலைகளில் முழுமையான நூலகநிலையங்கள் அமைக்கப்படும் என பிரதிக் கல்வி உயர்கல்வி அமைச்சர் பேராசிரியர் விஸ்வவர்ணபால தெரிவித்துள்ளார்.

தற்போது நூலகங்கள் இல்லாத பாடசாலைகளில் அவற்றை அமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் தற்போதுள்ள நூலகங்களை தரமுயர்த்தவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார். (ஐ)

---

## தமிழீழ மாவட்ட நீதிமன்றம் யாழ்ப்பாணம்

நாகரட்ணம் கங்காதரன்.
சசிகுமார் வீதி, கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்

வழக்காளி

இல: மணநீக்கம் 79/94

எதிர்

கங்காதரன் சசிகலா
260/14, பா. இராசா வீதி
ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்

எதிராளி

மேற்படி விலாசத்தில் வசிக்கும் வழக்காளியான நாகரத்தினம் கங்காதரன் மேற்படி கங்காதரன் சசிகலாவிடமிருந்து விவாகரத்தைப் பெறவும் ஏற்கனவே இருவருக்குமிடையில் இருந்த சட்டபூர்வமான திருமணம் குலைக்கப்பட வேண்டும் என்ற கட்டளையைப் பெறுவதற்காக வழக்கொன்றைத் தொடுத்துள்ளார். எதிராளியோ அல்லது அக்கறை உள்ள எவரோ 17-10-1994ஆம் திகதி காலை 9-00 மணிக்கு இந்த மன்றில் தோன்றி இது தொடர்பில் ஆட்சேபனை ஏதும் இருப்பின் தெரிவிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

கட்டளைப்படி,
பதிவாளர்
தமிழீழ மாவட்ட நீதிமன்று
யாழ்ப்பாணம்.

16-09-1994 (32888)

---

ஒரு புதிய மாற்றத்துக்கான

## திறவுகோல்

# A/L 95

# DAY CLASS

கணித உயிரியற்பிரிவு

**ஆரம்பம்: 23-09-1994**

**பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகும் வரை கட்டணம் அறவிடப்படமாட்டாது**

- ★ 95 ஆவணியிற் பரீட்சைக்குத் தோற்ற உள்ள, பாடசாலை செல்லாத மாணவர்கள் மாத்திரமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.
- ★ வகுப்புக்கள் திங்கள், செவ்வாய், வியாழன், வெள்ளி ஆகிய தினங்களில் காலை 8-30 — 12-30 மணி வரை நடைபெறும்.
- ★ முழுப்பாடத்திட்டமும் பூர்த்தியாக்கப்படும்.
- ★ 94 ஆவணியில் நடைபெற்ற பரீட்சை வினாத்தாள்கள் புள்ளியிடும் திட்டத்துடன் ஆரம்பவகுப்புகளில் ஆராயப்படும். நடைபெற்று முடிந்த பரீட்சையில் உங்கள் பெறுபேறுகளை முன்னரேயே தீர்மானிக்க இது உதவும்.
- ★ வகுப்புகள் யூனிவேர்சல் கல்வி நிறுவனத்திலும் நேச்சர் விஞ்ஞானக் கல்வி நிறுவனத்திலும் வெவ்வேறு பிரிவுகளாக நடைபெறும்.
- ★ எனினும், இரு பிரிவுகளுக்கான அனுமதிகளும் யூனிவேர்சல் கல்வி நிறுவனத்தில் மாத்திரமே 19-09-1994 வரை வழங்கப்படும்;

**சமயோசிதமான ஆசிரியத் தெரிவே உங்களை மீட்சிக்குரியதாக்கும்**

| யூனிவேர்சல் | நேச்சர் |
|---|---|
| கந்தர்மடம் சந்தி, யாழ்ப்பாணம். | ஆரியகுளம் சந்தி யாழ்ப்பாணம். |

[சி/9174]

---

**சகலதுறை வணிகர்களுக்கும், ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் யாழ். வணிகர் கழகம் விடுக்கும்**

## முக்கிய அறிவித்தல்

இந்தியப்படை நம் தமிழ் இன மக்களுக்கு இழைத்த கொடுமைகளைத் தாங்காது துயர் கொண்டு எம் மக்களுக்காக, எம் மண்ணுக்காக ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து 15-09-87 தொடக்கம் 26-09-87 வரை நல்லூர் கந்தசுவாமி கோவில் வீதியிலே உண்ணாவிரதமிருந்து ஈகைச்சாவு அடைந்த தியாகி லெப். கேணல் திலீபனின் 7 ஆம் ஆண்டு நினைவுகூரும் முகமாக–

நாளை 17-09 94 சனிக்கிழமை சகலதுறை வணிகர்களும், ஊழியர்களும், பொதுமக்களும் தங்கள் வணிக நிலையங்களை முழுமையாக பூட்டி அன்றையதினம் நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றலில் காலை 7.30 மணிக்கு நடைபெறவிருக்கும் உண்ணாவிரதம், மற்றும் நிகழ்வுகளிலும் தவறாது கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

பொதுச் செயலாளர்
யாழ். வணிகர் கழகம்

[சி/9176]

---

- ✻ அடையாள அட்டைகள் (I. C.)
- ✻ வாகன வரி அனுமதிப்பத்திரம் (Tax)
- ✻ பெறுமதிமிக்க ஆவணங்கள் முதலியவற்றை நீடித்த பாவனைக்கு ஏற்ற வகையில்

**சகல அளவுகளிலும் கவறிங் (LAMINATION)**

செய்து கொள்ள நாடுங்கள்!

## சன்லைற் றைக்கிளீனேர்ஸ்

(சூரியப் பிரகாஸ்)

பெரியகடை, யாழ்ப்பாணம்.
கிளை:
கச்சேரியடி, யாழ்ப்பாணம்

[சி-9125]

---

## முக்கிய அறிவித்தல்

எனது சுகவீனம் காரணமாக என்னால் நடத்தப்பட்ட சீட்டுகள் சிறிது காலத்திற்கு (25-09-94 வரை) தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது; 26-09-94 தொடக்கம் சீட்டுக்கள் வழமை போல நடைபெறும் என்பதை அனைத்து அங்கத்தவர்களுக்கும் அறியத்தருகிறேன்;

இங்ஙனம்,
நா. சுந்தரலிங்கம்,
பாபா எரிபொருள் வாணிபம்.

கே. கே. எஸ். வீதி,
சுன்னாகம். (32896)

---

பருத்தித்துறை
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் (வ/து)

## முக்கிய அறிவித்தல்

பருத்தித்துறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இருபத்தைந்து கிளைகளுக்கும் கிளைக்குழுக்களைத் தெரிவு செய்வதற்காக கிளைக்குழுத் தேர்தலை நடத்தும் பொருட்டு அனைத்துக் கிளைகளிலும் 30-09.94இல் அங்கத்தவர் அட்டவணை மூடப்பட இருக்கின்றது:

எனவே, அத் திகதிக்கு முன்னர் ஏற்கனவே ரூபா 100/-க்கு குறைவாகப் பங்குப்பணம் செலுத்தி இருக்கும் அங்கத்தவர்கள் மீதிப் பணத்தைச் செலுத்தி தமது பங்குப்பணத்தை ரூபா 100/ஆக ஆக்கித் தங்கள் பெயர்களை வாக்காளர் அட்டவணையில் சேர்த்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தலைவர்,
பரு. ப. நோ. கூ. சங்கம்.

பருத்தித்துறை.
1994-09-14 (சி-9128)

---

## புலிகளின் குரல் வானொலி நான்காம் ஆண்டு நிறைவுப் போட்டிகள் பற்றிய அறிவித்தல்

''புலிகளின் குரல்'' வானொலி ஆரம்பித்து 1994 – 11 – 21 உடன் நான்காம் ஆண்டு நிறைவு பெறுவதையொட்டி பின்வரும் போட்டிகள் நடத்தப்பட்டுப் பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படுவதோடு, தெரிவு செய்யப்படும் ஆக்கங்கள் ஒலிபரப்புக்கும் ஏற்றுக் கொள்ளப்படும்.

உங்களின் ஆக்கங்களை 31 – 10 – 1994 க்குப் பிந்தாமல் ''புலிகளின் குரல்'', யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

1. வானொலி நாடகப் பிரதி

   வானொலி நாடகப் பிரதி ஆகக்கூடியது 30 நிமிடங்களுக்குள் ஒலிபரப்பக் கூடியதாக அமைதல் வேண்டும். பிரதிகள் எழுத்துத்தாளில் 10 பக்கங்களுக்குக் குறையாமலும் 13 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

2. சிறுகதை

   சிறுகதைகள் இதற்கு முன் ஒலிபரப்பப்படாதனவாகவும் பிரசுரிக்கப்படாதனவாகவும் இருத்தல் வேண்டும். 4 பக்கங்களுக்குக் குறையாமலும் 5 பக்கங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

3. கவிதை

   கவிதைகள் மரபுக் கவிதைகளாகவோ அல்லது புதுக்கவிதைகளாகவோ இருக்கலாம். ஒலிபரப்பு நேரம் 5 நிமிடங்களுக்கு குறையாமலும் 10 நிமிடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு:-

ஆக்கங்கள் தெளிவான கையெழுத்தில் அல்லது தட்டச்சுப் பொறித்து அனுப்பல் வேண்டும். ஆக்கங்கள் தமது சுயமுயற்சியில் எழுதப்பட்டதென்றும் இதற்கு முன் ஒலிபரப்பவோ அல்லது வேறெங்கேயாவது வெளியாகவில்லையெனவும் உறுதிப்படுத்தல் வேண்டும். படைப்பாளிகள் தங்கள் பெயர் முகவரிகளை ஆக்கங்களில் குறிப்பிடாமல் தனித்தாளில் எழுதி இணைத்து அனுப்பி வைக்கவும். ஆக்கங்கள் எமது போராட்டத்தை மையப்படுத்தியோ அல்லது முன்னெடுத்துச் செல்வதாகவோ அல்லது சமூக மேம்பாடு கருதியதாகவோ அமைதல் வேண்டும். விதிமுறைகளுக்கமையாமல் அனுப்பி வைக்கப்படும் ஆக்கங்கள் நிராகரிக்கப்படும்.

புலிகளின் குரல்,
தமிழீழம்.

[சி-9127]

---

இலங்கையின் முதல் புனிதராக்கப்படவிருக்கும்

ஆசாரத்துக்குரிய

# யோசவ் வாஸ்

அடிகளாரின்

வாழ்வு பணி பற்றிய

# கண்காட்சி - பொம்மலாட்டம்

இடம்: யாழ். மறைக் கல்வி நிலையம் (ஆயர் இல்லம்)

காலம்: **16, 17 - 09 - 1994**
காலை 9-00 முதல் மாலை 5-00 வரை

**கலை நிகழ்ச்சி**

நாட்டுக்கூத்து
(தென் மோடி ஆட்டக்கூத்து)

இடம்: மரியன்னை பேராலய கலை அரங்கு

காலம்: **17 - 09 - 1994** மாலை 6-30 மணி

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்

**பிரவேசம் இலவசம்**

வாழ்த்துவோர்:
பற்றீஷன்
தொழிற் பயிற்சி நிறுவனங்கள்.

(32898)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 6 ஆவது பிறந்ததின வாழ்த்து!



### செல்வன் கோகுலன் செல்வராஜா

நியூ லங்காபாம் இணுவிலைச் சேர்ந்த செல்வராஜா அறிவழகி தம்பதிகளின் செல்வப் புதல்வன் கோகுலன் தனது 6 ஆவது பிறந்தநாளை இன்று (16-09-1994) வெள்ளிக்கிழமை வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை அன்பு அப்பா, அம்மா, தங்கை வேணுகா அம்மப்பா, அம்மம்மா, பெரியமாமா, அறிவழகன் (பிரான்ஸ்), அத்தை சுகந்தினி (பிரான்ஸ்), மச்சான் பியர் (பிரான்ஸ்) சின்னமாமா அன்பழகன் (டோகா) சித்தி இன்பழகி (டென்மார்க்) சித்தப்பா பரமேஸ்வரன் (டென்மார்க்), சித்தி பேரழகி (கொழும்பு), சித்தப்பா கிருஷ்ணபாலன் (பிரான்ஸ்), மற்றும் வைரமுழு மேற்கில் இருக்கும் பெரியப்பா குடும்பம், மாமா, அத்தை, சின்னமாமா, அத்தை, பாலநாதன் சித்தப்பா குடும்பம், திருச்செல்வம் சித்தப்பா குடும்பம், ரவி அண்ணா (ஜேர்மனி), டோச்சன் மச்சான் (ஹொலண்ட்), சுதன் மச்சான் (ஜேர்மனி) மச்சான்மார், மச்சாள்மார், இரத்தினம் அப்பப்பா குடும்பம், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பொன்னாலை வரதராஜப்பெருமான் அருள் பெற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

நியூ லங்கா பாம்

கே. கே. எஸ். வீதி
இணுவில்.

(32906)

---

உ
சக்தி துணை

அருள் மிகு தான்தோன்றி ஸ்ரீ

### மனோன்மணி அம்பாள் ஆலய

## இரதோற்சவ தின வழிபாடு

## 18-09-1994

ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி

மேற்படி வழிபாடு இம்முறையும் கச்சேரி நல்லூர் வீதியில் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கும் ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் நடைபெறத் திருவருள் கூடியுள்ளது. அம்பிகை அடியார்கள் கலந்து கொண்டு அருள் பெறுவோமாக.

சைவமகாசபையினர்
நாரந்தனை

[32901]

---

## நினைவஞ்சலி



### திருமதி பாலநந்தினி இராமச்சந்திரா

தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தராகக் கடமையாற்றும் திரு. க. இராமச்சந்திரா அவர்களின் அன்புத் துணைவியான திருமதி பாலநந்தினி இராமச்சந்திரா அவர்கள் 1994 08-12ஆம் திகதி இறைவனடி சேர்ந்ததையிட்டு இன்று (16-09 94) நடைபெறும் ஆத்மசாந்தி வைபவத்தில்—

அன்னாரின் கணவருக்கும், குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

தென்மராட்சி பிரதேச செயலக
பணிமனை ஊழியர்களும்,
கிராம அலுவலர்களும்,
வெளிக்கள உத்தியோகத்தர்களும்.

பிரதேச செயலக பணிமனை,
தென்மராட்சி,
சாவகச்சேரி,
1994-09-16

(சி-9123)

---

## இன்று

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை தொண்டமனாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில்—

இன்று வெள்ளிக்கிழமை திரு. ஜெயபாலன் ஜெகதீஸ் "ஞான குருவே ஞானப் பழமே" எனும் தலைப்பில் சமயச் சொற்பொழிவு நிகழ்த்துவார். அறிமுகவுரையை தொண்டமனாறு மகாவித்தியாலய அதிபர் திரு. ந. அரியரத்தினம் நிகழ்த்துவார். (க)

★ ★ ★

யாழ். ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணிய வித்தியாசாலையின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு பாடசாலை முன்றிலில் அதிபர், ஏ. வி. கணேசலிங்கம் தலைமையில் நடைபெறும். (ஜ-4)

★ ★ ★

உடுப்பிட்டி அமெரிக்கமிசன் கல்லூரியில் இன்று வெள்ளி காலை 8-30 மணிக்கு சுவாமி சித்ரூபானந்தாவின் அருளுரை கல்லூரி அதிபர் திரு. ந. அனந்தராஜா தலைமையில் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

வட்டுக்கோட்டை கார்த்திகேய வித்தியாசாலையின் வருடாந்தப் பரிசளிப்பு விழாவும் கலாசார நிகழ்ச்சியும் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அதிபர் திரு. க. சந்திரசேகரனின் தலைமையில் நடைபெறும்.

(க-161)

---

பொருண்மிய...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
கிறது.

எனினும் இந்த ஒருவார காலத்திலும் காலை 10-00 மணி முதல் 1-00 மணி வரையுமே கண்காட்சியைப் பார்வையிட முடியும் என்றும்—

கண்காட்சியைப் பார்வையிட விரும்புவோர் தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் தாவடி முதன்மைச் செயலகத்தில் தொடர்பு கொண்டு முன் அனுமதி பெற வேண்டும் என்றும்—தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)

---

பகிடி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
வசனங்கள் பிரயோகிப்பது மான வெறுப்புமிக்க செயல்களில் ஈடுபட்டு வருகின்றனர். இது மிகவும் மனவேதனையைத் தரும் செயலாகும்.

இவர்களது இவ்வாறான செயல்களினால், இப் பெண் பிள்ளைகளின் பெற்றோர்கள் எவ்வளவு வேதனையும், துன்பமும் அடைவார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். நாம் எல்லோரும் நற்பண்புடைய மக்கள். எம் எல்லோருக்கும் சகோதர சகோதரிகள் உள்ளனர் என்பதை இவர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

எமது போராட்டமானது ஒழுக்கமான கட்டுப்பாடுடைய நல்லதோர் சமுதாய அமைப்பை கட்டியமைப்பதற்காகவே எனவே இக் காலகட்டத்தில் இவ்வாறான மனவேதனை தரக்கூடிய செயல்களை விட்டொழிந்து நற்பண்புகள் நிறைந்த நல்ல மனிதர்களாக நீங்கள் வளர வேண்டும்.

அண்மைக் காலங்களில் அநேகமான பெண் பிள்ளைகளும், அவர்களது பெற்றோர்களும் எமது காவல் பணிமனைகளுக்குச் சென்று முறையிட்டு வருகின்றார்கள். எனவே இவ்வாறு மனவேதனை தரும் முறையில் பெண்பிள்ளைகளுடன் பகிடிகள், சேஷ்டைகள் விடுபவர்கள் மீது காவல்துறையினர் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பர் என்பதை அறியத்தருகின்றோம்—என்று தெரிவிக்கப்பட்டுள்ளது (ஓ)

---

திலீபன்...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
பட்டு வருகின்றது.

திரும்பிய பக்கம் எல்லாம் திலீபனால் ஆற்றப்பட்ட உரைகளும், திலீபன் பற்றிய பாடல்களும் ஒலித்த வண்ணமுள்ளன.

(க-69-17-13-15-173-155)

---

பிரதி...
(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)
செய்தார் என்று பிரதி அமைச்சர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

இவரைக் கைது செய்த நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த... படி முன்னர் நீதவான் பொலிஸார், உத்தரவிட்டிருந்தார்.

(இ-6)

---

## ஜூலை 5 கரும்புலிகள் நாள்; அறிவியல் வினா போட்டி

யாழ்ப்பாணம், செப் 16

கரும்புலிகள் நாளை முன்னிட்டு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு பாடசாலை மாணவர்களுக்கிடையே நடத்தும் அறிவியல் வினாடி வினா போட்டித் தொடர் - 03 இன் பருத்தித்துறை கல்விக் கோட்டப் போட்டி நாளை சனிக்கிழமை காலை 9 மணியில் இருந்து 5 மணி வரை பருத்தித்துறை மெதடிஸ்த உயர்தர பெண்கள் கல்லூரியில் நடைபெறும்.

கோட்ட ரீதியாக நடத்தப்பட்டு மாவட்ட ரீதியில் இறுதியில் நடத்தப்படும் இப் போட்டியில் கடந்த ஜூலை மாதம் 2 ஆம் திகதி நல்லூர்க் கோட்டப் பாடசாலைகளுக்கிடையில் க. பொ. த. உ/த மாணவர்கள் மத்தியில் முதலாவது போட்டி நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

இந்தப் போட்டி கோட்ட ரீதியாக நடத்தப்பட்டு, இறுதியில் மாவட்ட ரீதியாக நடத்தப்படும்.

இப் போட்டித் தொடர் தமிழீழ வானொலியில் ஒவ்வொரு சனிக்கிழமையும் மாலை 5-30 மணியிலிருந்து 6 மணி வரை ஒலிபரப்பப்படும். (ஏ)

---

## MATHS CENTRE
NELLIADY

**A/L 94** இல் பரீட்சை எடுத்த மாணவர்களுக்கு உரியது

**PHYSICS** திரு. சோதிலிங்கம்

ஆரம்பம்: **16 - 09 - 1994** வெள்ளி 4 00 p.m.

ஏனைய பாட நேர அட்டவணையை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும்.

[சி-9175]

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| மலர்வு: | உதிர்வு: |
|---|---|
| 05 — 11 — 1926 | 28 — 08 — 1993 |

அமரர்

### தில்லைநாயகியம்மை வேலும்மயிலும்

திதி. பூர்வபக்கதுவ தசி

அன்புக்கரம் நீட்டி அணைத்தெமை
மகிழ்ந்தாய் அம்மா!
குறையேதுமின்றி நலம் பெறக்
காத்தாய் அம்மா!
புவியில் மேலாய் எம்மை வாழ
வைத்தாய் அம்மா!
கோயிலும் நீயே அம்மா! இன்று எம்முறை
தெய்வமும் ஆனாய் அம்மா!

தங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

"உருத்திர பவனம்"
நெல்லியோடை,
அச்சுவேலி தெற்கு.

(32902)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 27 — 04 — 1908 | 17 — 08 — 1994 |

### திருமதி பொன்னையா நாகமுத்து

17-8-94 அன்று நடைபெற்ற மரணச் சடங்கில் கலந்துகொண்டோருக்கும், அனுதாபச் செய்தி அனுப்பியவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அன்னாரின் ஆத்ம சாந்திக் கிரியைகள் இன்று (16-9-94) வெள்ளிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுவதனால் அந்நிகழ்வில் அனைவரையும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மகன்: சு. பொ. நவரட்ணம்
(சண்டிக்குளி, தற்போது கனடா)
மகன்: பொ. சண்முகசுந்தரம்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

இல. 5, ... ஒழுங்கை,
... யாழ்ப்பாணம்.

(32899)

---

## முக்கிய அறிவித்தல்

### நல்லூர் வணிகர் கழகம்

எமது தாயகத்தின் விடுதலைக்காக நீராகாரம் இன்றி உண்ணாவிரதம் இருந்து உயிர் ஈந்த தியாகச் சுடர் லெப். கேணல் திலீபனின் 7ஆம் ஆண்டு நினைவு நாட்களை முன்னிட்டு 17-09-94 சனிக்கிழமை காலை 7 00 மணி முதல் நல்லூரில் நல்லூர் வணிகர் கழகம் உண்ணாவிரதத்தை மேற்கொள்ளவுள்ளது. அன்றைய தினம் நல்லூர் வணிகர் கழகத்துக்கு உட்பட்ட அனைத்துத் துறை வணிகர் நிலையங்களையும் பூரணமாகப் பூட்டி அனைத்து வணிகர் பெருமக்களும் வணிக ஊழியர்களும் இந்த உணர்வு பூர்வமான உண்ணாவிரதத்தில் தவறாது பங்கு கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

"எம் மக்கள் அனைவரும் எழுச்சியுடையவர்களாயின் தமிழீழம் உருவாவதை யாராலும் தடுக்கமுடியாது"
திலீபன்

நன்றி

நல்லூர் வணிகர் கழகம்

(சி-9131)

---

உ
தேவி துணை

நல்லூர் பாணன்குளம்

### நாச்சி அம்பாள் தேவஸ்தானம்

புரட்டாதி மாத (சனீஸ்வர) வார

## நவக்கிரஹ (சனீஸ்வரர்) ஹோமம்

சனீஸ்வர பகவான் பிரார்த்தனை:

சங்கடம் தீர்க்கும் சனி பகவானே
மங்களம் பொங்க மனம்
வைத்தருள்வாய்
சச்சரவின்றி சாகா நெறியில்
இச்செகம் வாழ இன்னருள் தா! தா!

மெய்யடியார்களே!

ஹோமத்தில் கலந்து கொண்டு நவக்கிரஹ நாயகர்களுக்கு தண்ணீர் வார்த்து, எள் தீபம் ஏற்றி, வரும் இன்னல்களை அகற்றி, நல்வழி நடத்த, இறைவியையும், சனீஸ்வர பகவானையும், குரு பகவானையும் வணங்கி அருள் பெறுவீர்களாக.

காலம்: 17 — 09 — 1994 சனிக்கிழமை
நேரம்: காலை 9-00 மணி
உபயம்: திரு. செல்லத்துரை மகேந்திரன்
மூத்த விநாயகர் வீதி, நல்லூர்.

காலம்: 24 — 09 — 1994 சனிக்கிழமை
நேரம்: காலை 9 - 00 மணி
உபயம்: திரு. சோமேஸ்வரன் குடும்பம்
(உரிமையாளர்)

**நந்தி புடைவை மாளிகை**
மக்கள் நவீன சந்தை
யாழ்ப்பாணம்.

காலம்: 01 — 10 — 1994 சனிக்கிழமை
நேரம்: காலை 9-00 மணி
உபயம்: திரு நவநாதன் குடும்பம்,
20, மூத்த விநாயகர் வீதி, நல்லூர்.

காலம்: 08 — 10 — 1994 சனிக்கிழமை
நேரம்: காலை 9.00 மணி
உபயம்: திரு. பொ. சிவபாதம் குடும்பம்,
இல. 34, மூத்த விநாயகர் வீதி, நல்லூர்.

காலம்: 15 — 10 1994 சனிக்கிழமை
நேரம்: காலை 9 - 00 மணி
உபயம்: திரு. காசிநாதர் வர்ணகுலசிங்கம்
குடும்பம்
நாவலர்மார் வீதி,
நல்லூர்.

**17-09-1994** புரட்டாதி மாதப் பிறப்பு
காலை 6-30 மணி சங்கிராந்தித்தீர்த்தம்
மாலை 5 00 மணி திருவிழா
உபயம்: திரு சத்திபசீலன் குடும்பம்
மூத்தவிநாயகர் 1ஆம் ஒழுங்கை
நல்லூர்.

சுபம்.

[32897]

---

## மரண அறிவித்தல்

### சதாசிவம் மயில்வாகனம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர், அதிபர்)

தெல்லிப்பழை இழக்கு காளி கோவிலடியைச் சேர்ந்த சதாசிவம் மயில்வாகனம் 15-09-94 காலை 5.40 இற்கு சிவபதம் அடைந்தார்.

இவரின் ஈமக்கிரியைகள் இல. 36 துரைராசா வீதி வண்ணார்பண்ணையிலுள்ள அவரது மைத்துனர் வே. பாலசுப்பிரமணியத்தின் இல்லத்தில் அன்றைய தினம் நடைபெற்று பி. ப, 4 00 மணிக்கு பூதவுடல் யாழ். கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது என்பதை உற்றார், உறவினர், நண்பர்களுக்கு அறியத்தருகிறேன்.

தகவல்:
வே. பாலசுப்பிரமணியம்
ஆசிரியர்
(யூனியன் கல்லூரி தெல்லிப்பழை)

36 துரைராசா வீதி,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(32904)

---

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினரால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 392/3 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 16-09 1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org